**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 406** **நாள் : 28.11.2025**

**மாவட்ட தேர்தல் அலுவலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிகளை சிறப்புடன் மேற்கொண்ட 142 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு சால்வை அணிவித்து, கேடயங்களை வழங்கினார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, பொதுத் தேர்தல்களுக்கான சிறப்பு தீவிரத் திருத்தம் – 2026 பணிகள் சென்னை மாவட்டத்தில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் 3,718 வாக்குசாவடி நிலை அலுவலர்கள் (Booth Level Officers-BLOs) 04.11.2025 அன்று முதல் வீடு வீடாக சென்று வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்களை (Enumeration Forms) வழங்கி, பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை மீளப் பெற்று, இந்திய தேர்தல் ஆணையத்தின் வாக்குச்சாவடி நிலை அலுவலர் செயலியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பணிகளை சிறப்பாக மேற்கொண்ட சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 142 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை மேற்பார்வையாளர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர்/ சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் இன்று (28.11.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் சால்வை அணிவித்து, பாராட்டி கேடயங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் இணை ஆணையர் (கல்வி) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திருமதி நா. பூஷ்ணா தேவி, கல்வி அலுவலர் திருமதி வசந்தி, உதவி கல்வி அலுவலர் திரு. முனிராமைய்யா, வாக்குச்சாவடி நிலை மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**